சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – 2006–07, 2007–08 மற்றும் 2008–09–ஆம் கல்வியாண்டுகளில் – அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து துவங்கப்பட்ட 13 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கென தோற்றுவிக்கப்பட்ட 13 தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.06.2014 முதல் 31.05.2015 வரை நீட்டிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி [பக5(1)] துறை

அரசாணை(1டி) எண். 6 நாள்: 09.01.2015

(திருவள்ளுவராண்டு 2045, மார்கழி 25 )

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை)எண்.94, பள்ளிக் கல்வித் துறை, நாள் 03.04.2009.
2. அரசாணை(1டி) எண். 242, பள்ளிக் கல்வித் துறை நாள்: 30.8.2011
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.033245/எல் 3/2014, நாள் 17.06.2014.

------

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2006–2007, 2007–2008 மற்றும் 2008–09ஆம் கல்வியாண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து துவக்கப்பட்ட 13 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு, 13 உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் நாள் முதல் தற்காலிகமாக ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்து ஆணை வழங்கப்பட்டது. இப்பணியிடத்திற்கு அரசாணை எண்.234 நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 01.06.2009ன்படி திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் ரூ.9300–34800+ தர ஊதியம் ரூ.4800 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 01.06.2011 முதல் 31.5.2014 வரை மேற்குறிப்பிடப்பட்டுள்ள இப்பணியிடங்களுக்கு தொடர்நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இப்பணியிடங்களுக்கு 01.06.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையினை அரசு நன்கு பரிசீலனை செய்து, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 31.5.2014 வரை தொடர்நீட்டிப்பு செய்யப்பட்ட ரூ.9300–34800+ ரூ.4800 தர ஊதியம் மற்றும் ரூ.750/– தனி ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் உள்ள 13 தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.06.2014 முதல் 31.05.2015 வரை ஓராண்டிற்கு அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர்நீட்டிப்பு குறித்து நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை, இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்படுகிறது.

4. இப்பணியிடங்களில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களின் ஊதியம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படும் :-

<u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

" **2202** – பொதுக்கல்வி – **02** இடைநிலைக் கல்வி **109** அரசு இடைநிலைப் பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AA - அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – **01** சம்பளங்கள்.
(த.தொ.கு.**2202–02–109** AA 0108)"

5. இப்பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அப்பணியிடங்களுக்குரிய ஊதிய விகிதம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளையும் பெறத் தகுதி உடையவர்களாவர்.

6. இவ்வாணை நிதித் துறை அ.சா.எண். **65265**/கல்வி–II/**2014**, நாள்:06.01.2015–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.சபிதா**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–**6**.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–**6**.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–**6**.
மாநில கணக்காயர், சென்னை–**18**.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–**15**.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
<u>**நகல்:**</u>
நிதித் (கல்வி–II) / (வரவு செலவு I & II) துறை, சென்னை–**9**.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–**9**.
பள்ளிக்கல்வி (அநமு) துறை, சென்னை–**9**.
இருப்புக் கோப்பு /

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13.1.2015
**அரசு சார்புச் செயலாளர்**